**அ.வ.எண்.93/2024**
**வா.சா.1 : உமா மகேஷ்வரி**
**தேதி : 16.02.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வா.சா.ஆ.11 ஆவணத்தில் கண்ட கிரையம் பெற்றவர் பழனியம்மாள் என்பவரும், வா.சா.ஆ.12 ன் படி கிரையம் பெற்ற பாக்கியம்மாளும் முதல் பிரதிவாதியான எனது தந்தையின் சகோதரிகள் ஆவார்கள். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள் என் தகப்பனார் மற்றம் அவரது சகோதரர்கள் எழுதிக்கொடுத்து கிரைய ஆவணங்கள் ஆகும். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள் குடும்ப ஏற்பாட்டினால் ஏற்பட்ட ஆவணங்கள் என்பதால் அதற்குரிய கிரைய தொகைகள் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 கிரைய ஆவணங்களுக்கும், முதல் பிரதிவாதி பெற்ற தாவா ஏ அட்டவணை சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதி கிரையம் பெற்ற சர்வே எண்.424/1 பி-சம்மந்தப்பட்ட சொத்திற்கான புதிய சர்வே எண் 424/7 என்று சொன்னால் அது பற்றி தெரியாது. சர்வே எண் 424/7-யை பொறுத்து தவறுதலாக கூட்டுப்பட்டா ஏற்பட்டது என்றும் பின்பு மேற்படி தவறு திருத்தப்பட்டு 424/7- க்கு முதல்பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி 1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை 3 ஆம் பிரதிவாதி தரப்பில் தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.02.16 17:48:53 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.